بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 05/05/2023 அன்று U.K. - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில், அத்ல் - நீதி, இஹ்ஸான் - அதிக நன்மை புரிதல் மற்றும் ஈதாயிஸில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் ஆகியவற்றிற்கான ஞானமிகு விளக்கம்**

**பாக்கிஸ்தான் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுமாறு தொடர்ச்சியான வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

اِنَّ اللّٰہَ یَاۡمُرُ بِالۡعَدۡلِ وَ الۡاِحۡسَانِ وَ اِیۡتَآیِٔ ذِی الۡقُرۡبٰی وَ یَنۡہٰی عَنِ الۡفَحۡشَآءِ وَ الۡمُنۡکَرِ وَ الۡبَغۡیِ ۚ

یَعِظُکُمۡ لَعَلَّکُمۡ تَذَکَّرُوۡنَ

பொருள்: நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) நீதியுடன் நடந்து கொள்ளவும், அதிக நன்மை செய்யவும், உறவினர்கள் அல்லாதவர்களையும் உறவினர்கள் போன்று எண்ணி, அவ்வாறே உதவி புரிவதற்கும் கட்டளையிடுகிறான். எல்லா வகையான வெட்கக்கேட்டிலிருந்தும், வெறுக்கத்தக்கவற்றிலிருந்தும், வரம்பு மீறுதல்களிலிருந்தும் அவன் தடுக்கிறான். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை வழங்குகிறான்.

(அதிகாரம் அந்நஹ்ல், வசனம் 91)

இந்த வசனம் ஒவ்வொரு ஜுமுஆவின் மற்றும் இரு பெருநாள்களின் இரண்டாவது குத்பாவிலும் ஓதப்படுகிறது. இந்த அருளுக்குரிய வசனத்தில் சில நன்மைகளை செய்யமாறும், சில தீமைகளிலிருந்து தவிர்ந்திருக்குமாறு கூறப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் கட்டளைகள் படி, வழிகாட்டல்கள்படி செயல்படுவதுதான் ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் அடையாளமாகும்.

இந்த வசனத்தில் எந்த நன்மைகளைப் பற்றி கூறப்பட்டுள்ளதோ, அதாவது, அத்ல் - நீதியுடன் நடத்தல், இஹ்ஸான் - அதிக நன்மை புரிதல் மற்றும் ஈதாயிஸில் குர்பா - உறவினர்களுக்கு வழங்குவதைப் போன்று வழங்குதல் ஆகியவை தொடர்பாக இன்று நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களை முன்வைப்பேன்.

எல்லா வழிகாட்டலும் ஒரே மையப்புள்ளியைத்தான் சுற்றி வருகின்றன. இருப்பினும், அன்னார் பல்வேறு விதத்தில் அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள். இந்த வழிகாட்டல்கள் நாம் நம்முடைய வாழ்வை அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப கழிப்பதன் பக்கம் நம்மை வழி நடத்துகின்றன. நாம் இந்த வழிகாட்டல்கள் மீது ஆழ்ந்து கவனம் செலுத்தினால், அவற்றிற்கு ஏற்ப நம் வாழ்வினை அமைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்தால், நிச்சயமாக நம்மால் அல்லாஹ்வுடனும் நம் தொடர்பை வலுப்படுத்திக் கொள்ள முடியும். ஒருவர் மற்றவருக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் மிகச் சிறந்த முறையில் செலுத்த முடியும்.

அல்லாஹ்வுக்கான உரிமைகளை செலுத்துதல் மற்றும் அடியார்களுக்கான உரிமைகளை செலுத்துதல் எனும் வழியே சமூகத்திலும் முழு உலகத்திலும் அமைதிக்கான உத்திரவாதம் அளிக்கிறது. ஆனால், உலகத்தின் பெரும்பான்மை இதன் பக்கம் கவனம் செலுத்தாதது தான் வருத்தத்திற்குரிய விஷயமாகும். அது முஸ்லிம் உலகமாகட்டும். முஸ்லிம் அல்லாதவர்களின் உலகமாகட்டும். அனைவரும் ஒருவர் மற்றவரின் உரிமைகளைப் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் பொறுப்பு, தம்மையும் சீர்திருத்திக் கொண்டு, உலகத்தை இதன் பக்கம் திருப்புவதேயாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இறைவன் நீங்கள் அவனுடனும் அவனுடைய படைப்பினங்களுடனும் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளான். அதாவது, அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் செலுத்துங்கள். உங்களால் அதற்கு மேற்பட்டு செய்ய முடிந்தால், நீதியுடன் நடந்து கொள்வது மட்டுமல்லாமல், அதிக நன்மையும் புரியுங்கள். அதாவது, கடமையை விட அதிகமாகவும், நீங்கள் இறைவனைப் பார்க்கிறீர்கள் என்பது போன்று மிகவும் கலப்பற்ற தன்மையுடனும் இறைவனை வணங்குங்கள்.

உரிமைகளையும் விட அதிகமாக மக்களுடன் நயமாக நடந்து கொள்ளுங்கள். அதற்கும் மேற்பட்டு செய்ய முடிந்தால், (உள்)நோக்கமும் குறிக்கோளும் இன்றி, ஒருவர் நெருங்கிய உறவின் உத்வேகத்தால் செய்யும் அளவுக்கு இறைவனை வணங்குங்கள்; அடியார்களுக்குத் தொண்டாற்றுங்கள்.

பிறகு, இந்த வசனத்துக்கு ஏற்ப, அல்லாஹ்வுக்கான உரிமையை செலுத்துவதன் பால் கவனமூட்டியவாறு, அன்னார் மேற்கொண்டு விளக்கமாக கூறுகிறார்கள்: ஆக, உண்மையில், இறைவனையன்றி வணக்கத்திற்குரியவர் எவரும் இல்லை. அன்பு செலுத்தப்படுவதற்குத் தகுதியானவர் எவரும் இல்லை. நம்பி இருப்பதற்குத் தகுதியானவர் எவரும் இல்லை. ஏனெனில், படைப்பாளனாக, நிலைத்திருக்கச் செய்பவனாக மற்றும் சிறப்பாகப் பரிபாலிக்கக்கூடியவனாக இருக்கின்ற வகையில், ஒவ்வோர் உரிமையும் அவனுக்கே உரித்தானது.

இந்த அளவு நீங்கள் செய்து விட்டால் இது நீதியாகும். அதை மேற்கொள்வது உங்கள் மீது கடமையாகும். பிறகு, இதிலிருந்து முன்னேற விரும்பினீர்கள் என்றால், இஹ்ஸான் - அதிக நன்மை செய்தல் எனும் படித்தரம் உள்ளது. அது நீங்கள் அவனுடைய மகத்துவம், கம்பீரம் மற்றும் என்றும் அழியாத அவனது அழகைப் பார்த்து விட்டது போன்று, அவனது மகத்துவதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்பதாகும். இதற்குப் பிறகு, ஈதாயிஸில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் எனும் படித்தரம் உள்ளது. அது உங்களுடைய இறைவணக்கம், உங்களுடைய நேசம் மற்றும் உங்களுடைய கீழ்ப்படிதல் ஆகியவற்றிலிருந்து செய்கைத்தனமும் பாசாங்கும் முற்றிலும் அகன்று விட வேண்டும் என்பதாகும். நீங்கள் உங்கள் மூதாதையர்களை நினைவு கூர்வது போன்று, உள்ளத் தொடர்பால் அவனை நினைவு கூர வேண்டும். ஒரு குழந்தை தன் அன்பிற்குரிய தாயை நேசிப்பது போன்று, நீங்கள் அவனை நேசிக்க வேண்டும்.

பிறகு, அடியார்களுக்கான உரிமையை செலுத்துதல் தொடர்பாக இந்த வசனத்தின் பொருளாவது, உங்கள் சகோதரர்கள் மற்றும் மனித குலத்தோடு நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். உங்களுடைய உரிமைகளுக்கும் மேற்பட்டு அவர்களிடம் எதையும் வேண்டாதீர்கள். நீதியில் நிலைத்து நில்லுங்கள். இந்தப் படித்தரத்திலிருந்து முன்னேற விரும்பினீர்கள் என்றால், இதற்கு அடுத்து, இஹ்ஸான் - அதிக நன்மை புரிதல் எனும் படித்தரம் உள்ளது. அது நீங்கள் உங்கள் சகோதரர் உங்களுக்கு இழைத்த தீமைக்குப் பதிலாக நன்மை புரிய வேண்டும். மேலும், நல்ல முறையில் நடத்தல் மற்றும் அதிக நன்மை புரிதல் என்ற வகையில் உதவ வேண்டும் என்பதாகும்.

இதற்குப் பிறகு, ஈதாயிஸில் குர்பா - உறவினர்களுக்கு செய்வதைப் போன்று செய்தல் எனும் படித்தரம் உள்ளது. அது நீங்கள் எந்த அளவு உங்களுடைய சகோதரருக்கு நன்மை பயக்கிறீர்களோ அல்லது எந்த அளவு மனித குலத்திற்கு நன்மை செய்தாலும், அதன் மூலம் எந்தவொரு மற்றும் எவ்விதமான கைமாறான நன்மையையும் எதிர்பார்க்கக் கூடாது என்பதாகும். மாறாக, எந்தவொரு நோக்கமும் முன் இல்லாமல், இயல்பாகவே நீங்கள் அதை செய்ய வேண்டும். அதிக உறவு நெருக்கத்தின் உத்வேகத்தால் ஒரு நெருங்கிய உறவினர் மற்ற உறவினருக்கு நன்மை செய்வது போன்று செய்ய வேண்டும்.

எனவே, இது நல்லொழுக்க முன்னேற்றத்தின் இறுதி உச்சமாகும். அதாவது, படைப்பினங்கள் மீது அனுதாபம் காட்டுவதில், தன்னலமான எந்தவொரு எதிர்பார்ப்போ, நோக்கமோ, குறிக்கோளோ இடைப்படக் கூடாது. மாறாக, சகோதரத்தும் மற்றும் மனித நெருக்கத்தின் உத்வேகம் எந்த அளவு உயர்த்தரத்தில் வளர்ச்சி அடைந்து விட வேண்டும் என்றால், தானாகவே, எந்த செயற்கையும் இன்றி, எவ்வித நன்றி செலுத்துதலுக்கான ஆசையும் கொள்ளாமல் அல்லது துஆ செய்தல் அல்லது வேறு எவ்வகையான விளைவுக்கும் ஆசைபடாமல், அந்த நன்மை வெறும் இயல்பின் உத்வேகத்தால் வெளிப்பட வேண்டும்.

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறுகிறார்கள்: இந்த வசனத்தில் அல்லாஹ் மனிதனின் இறைஞானத்திற்கான மூன்று படித்தரங்களை எடுத்துக் கூறி விட்டான். மூன்றாவது படித்தரத்தை சொந்த அன்பு எனும் படித்தரமாகக் கூறிவிட்டான். இந்தப் படித்தரத்தில்தான் மனதின் நோக்கங்கள் அனைத்தும் எரிந்து விடுகின்றன. ஒரு கண்ணாடிக் குடுவை நறுமண திரவியத்தால் நிறைந்திருப்பது போன்று உள்ளம் அன்பால் நிறைந்து விடுகிறது. இந்தத் தரத்தைப் பற்றியே இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது:

வசனத்தின் பொருள்: நம்பிக்கை கொண்டவர்களில் எப்படிப்பட்ட சிலரும் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் இறை விருப்பத்தைப் பெறுவதற்காக தங்களுடைய உயிர்களை விற்று விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மீதுதான் இறைவன் கருணை புரிகிறான்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: இறைவன் உங்களிடம் என்ன எதிர்பார்க்கிறான்? நீங்கள் முழு மனித குலத்தோடு நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதைத்தான். பிறகு, அதற்கும் மேற்பட்டு, எவர்கள் உங்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லையோ அவர்களுக்கும் நன்மை செய்யுங்கள். பிறகு, அதற்கும் மேற்பட்டு, இறைவனின் படைப்பினங்களுடன் நீங்கள் அவர்களின் நெருங்கிய உறவினர்களைப் போன்று, தாய்மார்கள் பிள்ளைகளுடன் நடந்து கொள்வதைப் போன்று அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள்.

ஏனென்றால், அதிக நன்மை புரிபவர் சிலவேளை தனது நன்மைகளை சொல்லிக் காட்டியும் விடுகிறார். ஆனால், தாயைப் போன்று இயல்பான உத்வேகத்தோடு நன்மை செய்பவர் ஒருபோதும் தன்னை வெளிப்படுத்த மாட்டார். எனவே, நன்மைகளின் இறுதி படித்தரம், தாயைப் போன்று இருக்கக்கூடிய இயல்பான உத்வேகமாகும்.

இந்த வசனம் படைப்பினங்கள் தொடர்பானது மட்டுமல்ல. அதற்கு மேற்பட்டு, இறைவன் தொடர்பாகவும் இருக்கிறது. இறைவனுடன் நீதியுடன் நடந்து கொள்வது என்பது, அவனுடைய அருட்கொடைகளை நினைவுகூர்ந்து அவனுக்குக் கட்டுப்படுவதாகும். இறைவனுக்கு அதிக நன்மை புரிவதன் பொருள், நீ அவனைப் பார்ப்பது போல் அவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இறைவனுடன், உறவினர்களுக்கு வழங்குவதைப் போன்று வழங்குதல் என்பதன் பொருள், அவனை வணங்குவது சொர்க்கத்தின் மீதான ஆசையினாலும் இருக்கக் கூடாது. நரகத்தைப் பற்றிய அச்சத்தினாலும் இருக்கக் கூடாது. மாறாக, சொர்க்கமும் இல்லை; நரகமும் இல்லை என்று கற்பனை செய்து கொண்டாலும், அப்போதும் அன்பின் உத்வேகத்திலும் கட்டுப்படுதலிலும் வித்தியாசம் ஏற்படக்கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்நிய மக்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளை வழங்கியவாறு சில இடங்களில் இந்தக் கருத்தை கூறியுள்ளார்கள். இவ்வாறே தமது ஜமாஅத்துக்கு அறிவுரை செய்த வண்ணமும் இதை விளக்கமாகப் புரிய வைத்துள்ளார்கள்.

அதிகமாக கட்டளையிடக்கூடிய ஆன்மாவின் சூழலில் இருக்கும் இறையச்சம் உடையவரின் நிலைதான் நீதியின் நிலையாகும். இந்த நிலையை சீர்திருத்துவதற்காக நீதியை கடைபிடிப்பதற்கான கட்டளை உள்ளது. இதில் மனதை எதிர்க்க வேண்டி வருகிறது. உதாரணமாக, ஒருவரின் கடனை செலுத்த வேண்டி இருக்கிறது. ஆனால், எப்படியாவது அதை நான் அமுக்கி விட வேண்டும் என்றே மனம் விரும்புகிறது.

சில மக்கள் இந்த விஷயங்களைப் பொருட்படுத்துவதில்லை என்று நான் வருத்தத்தோடு கூற வேண்டி வருகிறது. நமது ஜமாஅத்திலும் தம்முடைய கடன்களை செலுத்துவதில் மிகக் குறைவாகவே கவனம் செலுத்தும் மக்கள் இருக்கிறார்கள். இது நீதிக்கு எதிரானதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ இப்படிப்பட்ட மக்களின் (ஜனாஸா) தொழுகையைத் தொழ வைத்ததில்லை. எனவே, கடன்களை செலுத்துவதில் சோம்பல் காட்டக் கூடாது என்பதை உங்களில் ஒவ்வொருவரும் நன்றாக நினைவில் கொள்ளட்டும்!

எல்லா வகையான துரோகம் மற்றும் நம்பிக்கையின்மையை விட்டும் விலகி ஓட வேண்டும். ஏனென்றால், இது இறை கட்டளைக்கு எதிரானதாகும். இறைவன் நன்மையை எட்ட வைப்பதற்கான வழிவகைகளைத் தகுந்த இடம் மற்றும் சந்தர்ப்பத்தோடு இணைத்து விட்டான். இந்த நன்மைகள் தத்தமது இடத்தில் பயன்படவில்லையென்றால் தீமைகளாகி விடும் என்று மேற்குறிப்பிட்ட வசனத்தில் இறைவன் தெளிவாகக் கூறி விட்டான். நீதி வெட்கக் கேடாக ஆகி விடும். அதாவது, வரம்பு மீறி செயல்பட்டால் அசுத்தமான நிலையாக ஆகிவிடும். இவ்வாறே, அதிக நன்மைக்கு எதிரான சூழல் உருவாகிவிடும். அதாவது, எந்த நிலையை அறிவும், நிலையான உள்ளமும் நிராகரிக்கிறதோ அது ஈதாயிஸில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் என்பதற்கு பதிலாக ‘பக்யீ’ எனப்படும் வரம்பு மீறலாகி விடுகிறது. அதாவது, பொருத்தமற்ற இடத்தில் வெளிப்படும் அந்த அனுதாப உணர்வு ஒரு தீய சூழலை உருவாக்கி விடும். உண்மையில் ‘பக்யீ’ என்ற அரபுச் சொல் அளவுக்கு அதிகமாக பொழிந்து வயல்களை நாசமாக்கும் மழைக்குக் கூறப்படும். கடமையை செலுத்துவதில் குறை வைப்பதற்கும் 'பக்யீ' என்று கூறப்படும். அல்லது கடமையானதைத் தாண்டிச் செல்வதும் பக்யீ எனப்படும். எனவேதான், இந்த மூன்று படித்தரங்களுடனும் தகுந்த இடம் மற்றும் தருணம் நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்முடைய நூல்களிலும், சபைகளிலும் இது தொடர்பாக எண்ணற்ற முறை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். எனவே, அல்லாஹ்வுடனான தொடர்பின் தரத்தைப் பெறுவதற்கும் அடியார்களுக்கான உரிமைகளை செலுத்துவதற்கும் இதன்படி செயல்பட முயற்சி செய்வது நமது பணியாகும்.

அல்லாஹ் நமக்கு இதற்கு ஏற்ப நம் வாழ்வைக் கழிப்பதற்கும், இறைவணக்கங்களின் உயர்த்தரத்தைப் பெறுவதற்கும், அடியார்களின் உரிமைகளை செலுத்துவதற்கும், குறிப்பாக, ஒருவர் மற்றவருடன் அன்பு,

நேசத்திற்கான உறவையும், உலகத்திற்கே ஒரு முன்னுதாரணமாகத் திகழும் வண்ணம் ஏற்படுத்திக் கொள்வதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக!

நாம் இந்த விஷயங்கள் படி செயல்பட்டவாறு பைஅத்துக்கான உரிமையை நிறைவேற்றுபவர்களாக ஆவோமாக! ஒவ்வொரு ஜுமுஆவும் நாம் இந்த விஷயங்களைக் கேட்டு இவற்றின்படி அமல் செய்யக்கூடியவர்களாக நம்மை ஆக்கட்டுமாக! இல்லையென்றால், நமக்கும் மற்றவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இருக்காது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் வேதனையுடன் வெளிப்படுத்தியதற்கேற்ப அல்லாஹ் நமக்கும் மற்றவர்களுக்கும் ஒரு தெளிவான வித்தியாசத்தைக் காட்டுவானாக!

*கடைசியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* பாகிஸ்தானின் நிலைமைக்காகவும் துஆ செய்து கொண்டே இருங்கள். நாமோ நன்மைகளைப் பரப்புவதற்காகப் பணியை செய்து கொண்டே இருக்க வேண்டும். ஷைத்தானிய இயல்பைக் கொண்ட மக்கள் அவர்களுடைய பணியான அநியாயத்தை செய்து கொண்டுதான் இருப்பர். நாமோ இந்த ஷைத்தான்களுடன், ஷைத்தானிய நிலையில் போட்டியிட மாட்டோம். நாமோ அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்படுபவர்களாக இருக்க வேண்டும்.

**அல்லாஹ் நமது ஈமானைப் பாதுகாக்க வேண்டும் என்றும் நமது ஈமான் ஒருபோதும் அசையக்கூடாது என்றும் எப்போதும் துஆ செய்யுங்கள்.** நமக்கு அல்லாஹ்வுடன், ஈதாயிஸில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் எனும் தொடர்பு உருவாகி விடட்டுமாக! பிறகு நாம் அல்லாஹ்வின் அருள்களின் காட்சியையும் முன்பை விட அதிகமாக காண்போம். இன் ஷா அல்லாஹுத்தஆலா.

**அல்லாஹ்வின் பார்வையில் எதிரிகளாகவும், அல்லாஹ்வின் பார்வையில் சீர்திருத்தத்திற்குத் தகுதி அற்றவர்களாகவும் இருப்பவர்களை அவன் தானே அழிப்பானாக!** இந்த நிலை உருவாகும் போது, அல்லாஹ்வுடன் நமது தொடர்பு இருக்கும் போது, பிறகு எதிரிகளின் அழிவின் காட்சியையும் நாம் காண்போம். இன் ஷா அல்லாஹ்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)